வணக்கம்

ஆகாஷ்வாணி - புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : கிருஷ்ணமூர்த்தி ராமசுப்ரமணியன்

நாள்: 16.08.2024 நேரம் : மாலை 6.10 மணி

---

*தலைப்புச் செய்திகள்*

ஜம்மு-காஷ்மீரில் அடுத்த மாதம் 18ஆம் தேதி முதல், 3 கட்டங்களாகவும், ஹரியானாவில், அக்டோபர் 1ஆம் தேதி ஒரே கட்டமாகவும், சட்டமன்றத் தேர்தல் நடைபெறும் என, தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

இந்தியாவின் SSLV-D3 ராக்கெட், EOS-08 செயற்கைக் கோளை, இன்று ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியது.

டாக்டர்களுக்கு எதிரான வன்முறை சம்பவங்களில், 6 மணி நேரத்திற்குள், முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்யும் பொறுப்பு, சம்பந்தப்பட்ட அலுவலகத் தலைவருக்கு இருப்பதாக, மத்திய அரசு அறிவுறுத்தி உள்ளது.

புதுச்சேரி விடுதலை நாள் இன்று கொண்டாடப்படுவதை ஒட்டி, துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன், மாநில மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

பாரீஸ் பாராலிம்பிக் போட்டிகளில், இந்தியாவில் இருந்து, இதுவரை இல்லாத அளவில், 84 வீரர்-வீராங்கனைகள் அடங்கிய குழு பங்கேற்க உள்ளது.

-----------------------------

*தேர்தல் அறிவிப்பு 1 (17)*

ஜம்மு-காஷ்மீரில் அடுத்த மாதம் 18ஆம் தேதி முதல், 3 கட்டங்களாகவும், ஹரியானாவில், வரும் அக்டோபர் 1ஆம் தேதி ஒரே கட்டமாகவும், சட்டமன்றத் தேர்தல் நடைபெறும் என தேர்தல் ஆணையம் இன்று அறிவித்துள்ளது. தலைமைத் தேர்தல் ஆணையர் திரு. ராஜீவ் குமார், இன்று புதுடெல்லியில் நடத்திய செய்தியாளர் கூட்டத்தில் இதை அறிவித்தார். ஜம்மு-காஷ்மீரில் முதல்கட்ட சட்டமன்றத் தேர்தல், அடுத்த மாதம் 18ஆம் தேதியன்றும், 2ஆம் கட்டத் தேர்தல், அடுத்த மாதம் 25ஆம் தேதியன்றும், 3ஆவது மற்றும் இறுதி கட்டத் தேர்தல், அக்டோபர் 1ஆம் தேதியன்றும் நடைபெற உள்ளது. ஜம்மு-காஷ்மீர் மற்றும் ஹரியானாவில, அக்டோபர் 4ஆம் தேதி, வாக்கு எண்ணிக்கை நடைபெறும் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது. ஜம்மு-காஷ்மீர் யூனியன் பிரதேசத்தின் 90 சட்டமன்றத் தொகுதிகளில், மொத்தம் 87 லட்சம் பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளதாகவும், தேர்தலுக்கென 11 ஆயிரத்து 800 வாக்குப்பதிவு மையங்கள் அமைக்கப்படும் என்றும் தலைமைத் தேர்தல் ஆணையர் தெரிவித்தார். மக்களவைத் தேர்தலுக்கு பின்னர், ஜம்மு-காஷ்மீரில் நிலவரங்கள் மாறி இருப்பதாகவும், ஜனநாயகத்தின் வெவ்வேறு அடுக்குகள் தற்போது வலுவாகி வருவதாகவும் அவர் கூறினார்.

*தேர்தல் அறிவிப்பு* 2 (6)

ஜம்மு-காஷ்மீர் மக்கள், மாற்றத்தையே விரும்புவதாகவும், மக்களவைத் தேர்தலின் போது ஜம்மு-காஷ்மீரில், பெரும் எண்ணிக்கையிலான மக்கள்

நீண்ட வரிசையில் காத்திருந்து வாக்களித்ததே இதற்கு சான்றாகும் என்றும் அவர் குறிப்பிட்டார். ஹரியானாவில், 2 கோடிக்கும் மேற்பட்ட வாக்காளர்கள் வாக்களிக்க, சுமார் 20 ஆயிரம் வாக்குச் சாவடிகள் அமைக்கப்படும் என்றும், தலைமைத் தேர்தல் ஆணையர் தெரிவித்தார்.

-----------------------------

*வாஜ்பாய்-நாடு* (12)

முன்னாள் பிரதமர் பாரத ரத்னா அடல் பிகாரி வாஜ்பாய் நினைவு நாளான இன்று நாடு அன்னாருக்கு புகழஞ்சலி செலுத்தியது. புதுடெல்லியில உள்ள, சதைவ் அட்டல் என்னும் வாஜ்பாய் சமாதியில், இன்று பிரார்த்தனை கூட்டம் நடைபெற்றது. குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, குடியரசுத் துணைத் தலைவர் திரு. ஜெக்தீப் தன்கர், பிரதமர் திரு. நரேந்திர மோடி ஆகியோர் இன்று காலை, சதைவ் அட்டல் சமாதியில் மலரஞ்சலி செலுத்தினர். பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், மாநிலங்களவையின் துணைத் தலைவர் திரு. ஹரிவன்ஷ், மக்களைவைத் தலைவர் திரு. ஓம். பிர்லா உள்ளிட்டவர்களும் இதில் கலந்து கொண்டனர். நாட்டை கட்டி எழுப்புவதில், இணையற்ற பங்களிப்பு ஆற்றியதற்காக அடல் பிகாரி வாஜ்பாய் எப்போதும் நினைவில் கொள்ளப்படுவார் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி சமூக ஊடகப் பதிவு ஒன்றில் கூறியுள்ளார்.

-----------------------------

*பங்களாதேஷ் (8)*

பங்களாதேஷில், இந்துக்கள் மற்றும் அனைத்து சிறுபான்மையினரின் பாதுகாப்பிற்கு, அந்நாட்டு இடைக்கால அரசின் தலைமை ஆலோசகர் பேராசிரியர் முகமது யூனுஸ் உறுதி அளித்துள்ளார். அவர் இன்று தொலைபேசி மூலம் பிரதமர் திரு. நரேந்திர மோடியை தொடர்பு கொண்டு பேசினார். இந்த உரையாடலின் போது இரு தலைவர்களும், நடப்பு நிலவரங்கள் பற்றிய கருத்துக்களை பரிமாறிக் கொண்டனர். அமைதியான, ஸ்திரமான, ஜனநாயக முற்போக்கு நாடாக வங்கதேசம் திகழ இந்தியா ஆதரவு அளிக்கும் என பிரதமர் திரு. நரேந்திர மோடி உறுதியளித்தார்.

-----------------------------

*இஸ்ரோ 1 (17)*

சிறு செயற்கைக் கோள்களை விண்ணில் செலுத்துவதற்கான இந்தியாவின் புதிய, SSLV-D3 ராக்கெட், 175.5 கிலோ எடை உள்ள, EOS-08 என்னும் புவிக் கண்காணிப்பு செயற்கைக் கோளை, ஶ்ரீஹரிகோட்டா சதீஷ் தவான் விண்வெளி மையத்தில் இருந்து, இன்று வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியது. சென்னையைச் சேர்ந்த ஸ்பேஸ் ரிக்க்ஷா ஸ்டார்ட்-அப் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட பேஸ் ரிக்க்ஷா ஸ்டார்ட்-அப் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட SR-0 என்னும் மற்றொரு செயற்கைக் கோளும், EOS செயற்கைக் கோளுடன் சேர்த்து விண்ணில் ஏவப்பட்டது. 500 கிலோ வரை எடை கொண்ட செயற்கைக் கோள்களை விண்ணில் செலுத்துவதற்கு ஏற்ற, இப்புதிய SSLV-D3 ராக்கெட், இந்திய

விண்வெளித் தொழில் துறையினரின் எதிர்காலத் தேவைகளுக்கு அடித்தளமாக அமையும் என்று, இஸ்ரோ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

செயற்கைக்கோள் வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப் பட்டதை தொடர்ந்து, இஸ்ரோ தலைவர் டாக்டர் சோம்நாத் செய்தியாளர்களிடம் பேசுகையில், ககன்யான் திட்டத்தின் கீழ், இந்திய விண்வெளி வீரர் ஒருவரை, விண்வெளிக்கு அனுப்புவதற்கான முன்னோட்டமாக, ஆளில்லாத விண்கலம் இவ்வாண்டு இறுதிக்குள் விண்ணில்

*இஸ்ரோ 2 (9)*

செலுத்தப்படும் என தெரிவித்தார். அனைத்து விதமான செயற்கைக் கோள்களையும் குறைந்த செலவில் தயாரித்து, வெற்றிகரமாக பரிசோதித்த பின்னர் விண்ணில் செலுத்தும் திறன் இந்தியாவிற்கு இருப்பதாகவும், செயற்கைக் கோள் தொழில்நுட்பங்களை, தொழில் துறையினருக்கு மாற்றுவதால், நாடு நன்மை பெறும் என்றும், உலக அளவிலான விண்வெளித் தொழில் துறையில், இந்தியாவின் இடம் வலுப்பெறும் என்றும், அவர் கூறினார். தமிழகத்தின் குலசேகரப்பட்டினத்தில், விண்வெளி மையம் ஒன்றை அமைக்கும் பணிகள், 2 ஆண்டுகளுக்குள் பூர்த்தியாகும் என்று, திரு. சோம்நாத் மேலும் தெரிவித்தார்.

-----------------------------

டாக்டர் வன்முறை (11)

டாக்டர்களுக்கு எதிரான வன்முறை சம்பவங்களில், 6 மணி நேரத்திற்குள், நிறுவன ரீதியில் முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்யும் பொறுப்பு சம்பந்தப்பட்ட அலுவலகத் தலைவருக்கு இருப்பதாக, மத்திய சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது. சுகாதார சேவைகள் துறைத் தலைமை இயக்குநர் திரு. அடுல் கோயல் இதுகுறித்து, அனைத்து மத்திய அரசு மருத்துவமனைகள் மற்றும் மருத்துவக் கல்லூரிகளின் தலைவர்களுக்கு கடிதம் எழுதி உள்ளார். இதற்கிடையே, கொல்கத்தாவில், பெண் டாக்டர் ஒருவர் கொலை செய்யப்பட்டதை கண்டித்து, நாடு முழுவதும் நாளைக் காலை 6 மணி முதல், 24 மணி நேரத்திற்கு, மருத்துவர்களின் சேவை விலக்கிக் கொள்ளப்படும் என்றும், இந்திய மருத்துவர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

-----------------------------

புதுச்சேரி சுதந்திரம் (9)

புதுச்சேரி சுதந்திர தினம் இன்று கொண்டாடப்படுவதை ஒட்டி, துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன், மாநில மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார். பிரெஞ்ச் ஆதிகத்தில் இருந்து புதுச்சேரியை விடுவிக்கப் போராடிய சுதந்திரப் போராட்ட தியாகிகள் அனைவரையும், இந்நாளில் நினைத்து போற்றுவது, நம் கடமை என்று அவர் தமது வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார். புதுச்சேரியின் தனித்துவம், மற்றும், சிறப்பை பேணுகின்ற அதே வேளை, நாட்டின் வளர்ச்சிக்கு புதுச்சேரியின்

பங்களிப்பை உறுதி செய்ய, அனைவரும் உறுதி ஏற்போமாக என்றும் துணை நிலை ஆளுநர் கூறியுள்ளார்.

------------------------------

*பரிமாற்ற நாள்* (13)

புதுச்சேரி அரசின் செய்தி-விளம்பரத் துறை சார்பில், சட்டப்பூர்வ பரிமாற்ற நாள் விழா, கீழூர் நினைவு மண்டபத்தில் இன்று கொண்டாடப்பட்டது. இவ்விழாவில், மாநில வேளாண் அமைச்சர் திரு. ஜெயகுமார், தேசிய கொடியை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார். தொடர்ந்து, சட்டப் பேரவைத் தலைவர் திரு. ஆர். செல்வம், சட்டப் பேரவைத் துணைத் தலைவர் திரு. ராஜவேலு, அரசுக் கொறடா திரு. ஏகேடி ஆறுமுகம் உள்ளிட்டோர், கீழூர் நினைவுச் சின்னத்தில் மலர் தூவி மரியாதை செலுத்தினர். பின்னர் தியாகிகளுக்கு இனிப்பு வழங்கி, சால்வை அணிவித்து கவுரவித்தனர். தலைமைச் செயலர் டாக்டர் சரத் சவுகான், காவல் துறை ஐஜி டாக்டர் அஜித் குமார் சிங்லா, விடுதலைப் போராட்ட வீரர் நலத்துறைக்கான அரசுச் செயலர் திருமதி பத்மா ஜெய்ஸ்வால், மாவட்ட ஆட்சியர் திரு.குலோத்துங்கன், செய்தி-விளம்பரத் துறையின் பொறுப்பு இயக்குநர் திரு. கலியபெருமாள் உள்ளிட்ட அதிகாரிகளும் விழாவில் கலந்து கொண்டனர்.

------------------------------

*வாஜ்பாய்-புதுச்சேரி* (8)

முன்னாள் பிரதமர் பாரத ரத்னா அடல் பிகாரி வாஜ்பாய் நினைவு நாள், புதுச்சேரி அரசு சார்பில் இன்று அனுசரிக்கப்பட்டது. சட்டப்

பேரவை வளாகத்தில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அன்னாரின் திருவுருவப் படத்திற்கு, முதலமைச்சர் திரு. ரங்கசாமி, சட்டப் பேரவைத் தலைவர் திரு. ஆர். செல்வம், அமைச்சர்கள் திரு. ஜெயகுமார்-திரு. சாய் சரவணன் குமார், சட்டப் பேரவைத் துணைத் தலைவர் திரு. ராஜவேலு, அரசுக் கொறடா திரு. ஏகேடி ஆறுமுகம், சட்டமன்ற உறுப்பினர் திரு. கேஎஸ்பி ரமேஷ் உள்ளிட்டோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

-----------------------------

*வீராம்பட்டினம்* (8)

புதுச்சேரி வீராம்பட்டினத்தில் இன்று நடைபெற்ற செங்கழுநீரம்மன் கோவில் தேர் திருவிழாவை, துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன், வடம்பிடித்து தொடக்கி வைத்தார். பின்னர் செங்கழுநீரம்மன் கோவிலில் அவர் தரிசனம் செய்தார். முதலமைச்சர் திரு. ரங்கசாமி, சட்டப் பேரவைத் தலைவர் திரு. ஆர். செல்வம், அமைச்சர்கள் திரு. ஜெயகுமார்-திரு. சாய் சரவணன் குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஏராளமான பக்தர்கள், தேர் திருவிழாவில் கலந்து கொண்டனர். முன்னதாக, கோவிலுக்கு வந்த துணை நிலை ஆளுநரை, கோவில் நிர்வாகிகள் மாலை அணிவித்து வரவேற்றனர்.

-----------------------------

*வானிலை* (14)

வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக, இன்று தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும், லேசானது

முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. சேலம், ஈரோடு, திருப்பூர், நாமக்கல், தேனி, தென்காசி, நெல்லை மற்றும் குமரி மாவட்டங்களில், ஓரிரு இடங்களில், கனமழைக்கும், கோவை-நீலகிரி, மற்றும், திண்டுக்கல் மாவட்ட மலைப் பகுதிகளில் ஓரிரு இடங்களில் மிக கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாக தெரிவிக்கப் பட்டுள்ளது. வரும் 22ஆம் தேதி வரை, மழை நீடிக்கலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. மன்னார் வளைகுடா உள்ளிட்ட தமிழகத்தின் கடலோரப் பகுதிகள், வடமேற்கு வங்கக் கடல் உள்ளிட்ட வங்கக் கடல் பகுதிகளிலும், மணிக்கு 45 கிலோ மீட்டர் வரையிலான வேகத்தில் பலத்த சூறாவளிக் காற்று வீசக்கூடும் என்பதால், மீனவர்கள் வரும் 20ஆம் தேதி வரை, இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப் பட்டுள்ளனர்.

-----------------------------

*பாராலிம்பிக்* (13)

வரும் 28ஆம் தேதி முதல், செப்டம்பர் 8ஆம் தேதி வரை நடைபெற உள்ள பாரீஸ் பாராலிம்பிக் போட்டிகளில், இந்தியாவில் இருந்து இதுவரை இல்லாத அளவில், 84 வீரர்-வீராங்கனைகள் அடங்கிய குழு பங்கேற்க உள்ளது. இதில் 50 பேர் ஒலிம்பிக் பீடமே இலக்கு என்னும் TOPS திட்டத்தினால் பயன் பெற்றவர்கள் என்று மத்திய விளையாட்டுத் துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார். பாரீஸ் பாரா லிம்பிக் போட்டிகளில் பங்கேற்கும் இந்தியக் குழுவினரை

வழியனுப்பி வைக்க, புதுடெல்லியில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் அவர் பேசுகையில், இவர்களில் பலர், கேலோ இண்டியா விளையாட்டுப் போட்டிகள் மூலம் தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள் என்றும் கூறினார். கடந்த முறை டோக்கியோவில் நடைபெற்ற பாராலிம்பிக் போட்டிகளில், 54 பேர் கொண்ட இந்தியக் குழு சிறப்பாக பங்கேற்று, 19 பதக்கங்களை வென்று திரும்பியதும் குறிப்பிடத்தக்கது.

------------------------------

*மனு பாக்கர்* (9)

பாரீஸ் ஒலிம்பிக் போட்டிகளில், வெண்கலப் பதக்கம் வென்ற இந்திய துப்பாக்கி சுடும் வீராங்கனை மனு பாக்கரை, மத்திய கப்பல் மற்றும் நீர்வழிப் போக்குவரத்து அமைச்சர் திரு. சர்பானந்த சோனோவால், புதுடெல்லியில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில், பாராட்டி கவுரவித்தார். 10 லட்சம் ரூபாய்க்கான பரிசுக் காசோலை ஒன்றையும், மனு பாக்கருக்கு அவர் வழங்கினார். திறமை, அர்ப்பணிப்பு மற்றும் உறுதிப்பாடு நிறைந்தவர் மனு பாக்கர் என்று அமைச்சர் பின்னர் செய்தியாளர்களிடம் பேசுகையில் கூறினார். வரவிருக்கும் காலங்களில், மனு பாக்கர் இன்னும் பல பதக்கங்களை வென்று, நாட்டிற்கு பெருமை சேர்ப்பார் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

------------------------------

*பத்ம விருது* (7)

பத்ம விருதுகளுக்கான பெயர்ப் பதிவு நடைமுறைகள் அடுத்த மாதம் 15ஆம் தேதி வரை, நடைபெற உள்ளன. ஆர்வம் உள்ள

பங்கேற்பாளர்கள், ளர்கள், awards.gov.in என்னும் முகவரியில், ராஷ்ட்ரிய புரஸ்கார் இணைய தளத்தை அணுகலாம். நாட்டின் மிக உயரிய சிவிலியன் விருதுகளில் ஒன்றான பத்ம விருதுகள், பல்வேறு துறைகளில் தனிச் சிறப்பான சேவை புரிந்தவர்களுக்கு, பத்ம ஸ்ரீ, பத்ம பூஷன், பத்ம விபூஷன் ஆகிய 3 பிரிவுகளில் வழங்கப் படுகின்றன.

-----------------------------

*செய்தி-ஒலிபரப்பு (6)*

ஆகாசவாணியில், ஒருமணி நேரத்திற்கு ஒருமுறை ஆங்கிலம் மற்றும் ஹிந்தியில் ஒலிபரப்பாகும் செய்தி அறிக்கைகளின் வரிசை, வரும் 17-18 ஆம் தேதிகளுக்கு இடையிலான நள்ளிரவு 12 மணி முதல், மாற்றி அமைக்கப்படுகிறது. புதிய மாற்றத்தின்படி, ஒவ்வொரு மணி நேரத்திலும், முதலில் ஹிந்தி செய்தி அறிக்கையும், அதை தொடர்ந்து 5 நிமிட ஆங்கில செய்தி அறிக்கையும் இடம்பெறும்.

-----------------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

ஜம்மு-காஷ்மீரில் அடுத்த மாதம் 18ஆம் தேதி முதல், 3 கட்டங்களாகவும், ஹரியானாவில், அக்டோபர் 1ஆம் தேதி ஒரே கட்டமாகவும், சட்டமன்றத் தேர்தல் நடைபெறும் என, தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

இந்தியாவின் SSLV-D3 ராக்கெட், EOS-08 என்னும் புவிக் கண்காணிப்பு செயற்கைக் கோளை, இன்று ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியது.

டாக்டர்களுக்கு எதிரான வன்முறை சம்பவங்களில், 6 மணி நேரத்திற்குள், முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்யும் பொறுப்பு, சம்பந்தப்பட்ட அலுவலகத் தலைவருக்கு இருப்பதாக, மத்திய அரசு அறிவுறுத்தி உள்ளது.

புதுச்சேரி சுதந்திர தினம் இன்று கொண்டாடப்படுவதை ஒட்டி, துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன், மாநில மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

பாரீஸ் பாராலிம்பிக் போட்டிகளில், இந்தியாவில் இருந்து, இதுவரை இல்லாத அளவில், 84 வீரர்-வீராங்கனைகள் அடங்கிய குழு பங்கேற்க உள்ளது.